**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (திட்டம் -1) - 2020**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (திட்டம் -1) 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

---

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், மின்சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளடுதடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். நிகழ்ச்சித்திட்டதின் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்பட்ட உயர் மின்வலு உருவாக்கம், உபமின்நிலையத்திற்கு இணைக்கப்பட்டவை, உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு, முனனேற்றப்பட்ட வினைத்திறனான நடுத்தர வோல்டேச் வலையமைப்பு முன்னேற்றப்பட்ட வினைத்திறனான மின்வலுவுக்கான பக்க முகாமைத்துவ கேள்வி மற்றும் வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு போன்ந ஐந்து கூறுகளின கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்படுகின்றன. வசதியளிப்பு நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,509.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,325.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2023 நவம்பர் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தால் பெறப்படு செயற்திட்டத்தின் அமுலாக்கலின் போது வட்டி மற்றும் கடப்பாட்டு கட்டணங்கள் போன்ற கடன்படல் கிரயம் குறிப்பு 2.3.6 இல் குறித்த கணக்கீட்டுக் கொள்கைக்கு முரணாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை. | - | பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம்- கட்டம் -1 ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் இல. 3147 ஆல் நிதியளிக்கப்பட்டது, இலங்கை அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் இந்த குறித்த கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. ஆகவே, கடப்பாட்டுக் கட்டணங்கள் மற்றும் இந்த கடன் தொடர்பான IDC நிதி அமைச்சால் செலுத்தப்பட்டிருந்தது. இது செயற்திட்டம் தொடர்பானதாக உள்ள போதிலும் இலங்கை மின்சார சபைக்கு அப்பாற்பட்ட வித்தியாசமான பதிவாக உள்ளது. இலங்கை மின்சார சபை கொடுக்கல் வாங்கல் அடிப்படையில்லாமல் கிரயத்தை கணக்கிட முடியாது. | உரிய கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 வரை மூலதனமாக்கப்பட்ட வாகனங்களிற்கான பெறுமானத்தேய்வு வாகனங்களின் மொத்த பெறுமதியில் கழிக்கப்பட வேண்டியிருந்த பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடாக கணக்கீட்டுக் கொள்கைக்கு பதிலாக இலங்கை மின்சாரசபை மூலதனப் பங்களிப்பில் கணக்கிடப்பட்டிருந்தது. | 105 | கணக்கீட்டு நியமனங்களின் பிரகாரம், திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் மூலதனமாக்கப்பட்ட சொத்துக்களின் தற்போதைய பெறுமானத்தேய்வு என்பன செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் தவறாக பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மத்தியபடுத்திய சொத்துக்கள் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு ின் பராமரித்தலின் தற்போதைய நடைமுறையுடன் இணங்கும்நோக்கில், உதவி பொது முகாமையாளரிற்கு மாற்றப்பட்டுள்ளது. | பெறுமானத்தேய்விற்காக முறையான கணக்கீட்டு முறையை பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செயற்திட்டத்தின் கடன் பெறுகைகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் கிரயம் ஆசிய அபிவிருத்தி வங்கி (வாகனங்களின் CIP பெறுமதி) மற்றும் இலங்கை மின்னசார சபையால் (வரிகள்) கூட்டாக நிதியளிக்கப்படுகின்றன சொத்துக்களின் மொத்த பெறுமதியின் காட்டப்படுகின்ற நிதிப்பயன்படுத்தலின் நியாயமான சமர்ப்பித்தலிற்காக தேவைப்பட்டதுடன் செயற்திட்ட கணக்குகளின் நோக்கத்திற்காக மேலதிக தகவல்களிற்காகவும் உள்ளன.

சம்பந்தப்பட்ட செலவு பதிவு விசேட நோக்க கணக்குகளின் தேவைகளைச் செய்வதற்கு இலங்கை மின்சார சபையின் பங்களிப்பின் கீழ் காட்டப்பட்டது. செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் இலங்கை மின்சார சபையின் பங்களிப்பு கூற்று உள்ளபடியான பேரேட்டு தொகையில் இருக்கவில்லை ஆனால் இது செயற்திட்டத்தின் இலங்கை மின்சார சபை பங்களிப்பின் ஒருபகுதி செயற்பாடுகளை பிரதி நிதித்துவப்படுத்துகின்றது.

கணக்கீட்டு நியமங்களுடன் இணங்கும் நோக்கத்திற்காக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு நடைபெறும் வேலைக் கணக்கிற்கு சாட்டுதல் செய்யப்பட்டது. மேலும், செயற்திட்டமானது பூர்த்தியாக்கப்பட்டுள்ளது அந்த சகல சொத்துக்களும் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றதுடன் தொடர்புபட்ட திரண்ட பெறுமானத்தேய்வுக்கு ஏற்படுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இலங்கை மின்சாரசபை கணக்குகளிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | செயற்திட்டத்தின் பகுதி 3 மூலம் பயன்படுத்தப்பட்ட ரூபா 33 மில்லியன் பெறுமதியான ஐந்து வாகனங்கள் 2028, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் இலங்கை மின்சார சபைக்கு மாற்றப்பட்டிருந்த பொதிலும், அந்த வாகனங்கள் இன்னமும் செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட வாகனங்கள் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பிடிருந்காத போதும் அந்த வாகனங்களிற்கான பெறுமானத்தேய்வு இனங்காணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 33 (2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொல்லப்பட்ட வானங்களில் முற்கொண்டு வரப்பட்ட தேறிய மீதி) | செயற்திட்ட கணக்குகள் திரண்ட நடைபெறும் வேலை எப்படி அந்த சொத்துக்கள் நிதியளிக்கப்பட்டுள்ள என காட்டப்படுகிறது. ஆகவே, நிதிக்கூற்றுக்களிலிருந்து மோட்டார் வாகனங்கள் தவிர்க்கப்பட்டிருக்குமாயின் குறித்த நிதிப் பதிவு செயற்திட்ட நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட முடியாதுள்ளது.<br><br>அந்த சொத்துக்கள் அதாவது செயற்திட்டத்திற்காக பயன்படுத்திய காலப்பகுதிக்காக ரூபா 24 மில்லயன் தொகையான பெறுமானத்தேய்வு கணக்கிற்குள் எடுக்கப்பட்டுள்ளது. . | முறையான கணக்கீட்டு முறையை பிரயோகிப்பதற்கோ அல்லது உரிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட நடவடிக்கைகளின் பகுதி 1 மற்றும் 2 மூலம் பயன்படுத்திய சொத்துக்கள் செயற்திட்டத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப் பட்டிருக்காத போதிலும் சொல்லப்பட்ட சொத்துக்களிற்காக ரூபா 39 மில்லியன் தொகையான பெறுமானத்தேய்வு 2020 திசெம்பர் 31 வரை இனங்காணப் பட்டிருந்ததுடன் இலங்கை மின்சார சபை மூலதன பங்களிப்பு மற்றும் நடைபெறும் வெலையில் கணக்கீடு செய்யப்பட்டது. | 39 | மத்தியமயப்படுத்தப்பட்ட இடத்தில் (AGM – கிரய பகுதி) செயற்திட்டப பிரிவிற்கு (உரிமையாண்மை இலங்கை மின்சார சபையின் பெயரில் உள்ளது) சொந்தமான சகல சொத்துக்களும் பதிவதற்கு செயற்திட்ட பிரிவால் பயன்படுத்தப்படுவது நற்பொது நடைமுறையாக உள்ளது. இதன்படி, முதலாவது கருத்து சொத்துக்கள் பதியப்படுவதுடன் உரிய செயற்திட்ட கிரய நிலைத்தில் பதியப்பட்டதுடன் பின்னர் பெறுமதி பிரிவிற்குள் மத்தயமயப்படுத்தப்பட்ட சொத்து தரவு அடிப்படையில் பேணும் நோக்கில் AGM கிரய நிலையத்திற்கு மாற்றப்பட வேண்யிருந்தது.<br><br>AGM கிரய நிலையத்தால் சகல செயற்திட்ட சொத்துக்களிற்காக பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்ய சேண்டியுள்ளதுடன் | முறையான கணக்கீட்டு முறையை பிரயோகிப்பதற்கோ அல்லது உரிய தகவல்களை வெளிப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தற்போதைய கால பெறுமானத்தேய்வு செயற்திட்டத்தின் நடைபெறும் வேலைக் கூற்றில் தற்பொதைய கால பெறுமான தேய்வு சாட்டுதலை உள்வாங்கும் நொக்கில் தனிப்பட்ட செயற்திட்டங்களால் பயன்படுத்திய சொத்தக்களின் அடிப்படையில் உரிய செயறற்திட்ட கிரய நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. | |
| (உ) 2020 திசெம்பர் 31 வரை ரூபா 5.8 மில்லியன் தொகையான விசேட வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கில் பெறப்பட்ட வட்டி செயற்திட்டத்தின் பகுதி 2 இன் பிரகாரம் புறம்பான விடயமாக காட்டுவதற்குப் பதிலாக இலங்கை மின்சார சபை மூலதனப் பங்களிப்பில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 5.8 | விசேட வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கில் பெறப்பட்ட வட்டி AFD கடன் பயன்படுத்தலிலிருந்து கழிக்கப்பட வேண்டும், AFD முற்பண கட்டுநிதி வங்கி கணக்கில் வட்டி உள்பாய்ச்சல் செயற்திட்ட செலவினங்களின் கொடுப்பனவுகளிற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.<br><br>ஆகவே, இது விசேட வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கில் பெறப்பட்ட வட்டி வருமானம் செயற்திட்டத்தின் கடன்படல் கிரயம் மற்றும் மூலதன செலவினத்தில் கழிக்கப்படும். இதன்படி, மூலதன செலவினம் கழிக்கப்பட்டும் விசேட வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கு மீதியில் அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த கணக்கீட்டு முறை இக.நி 23 இலுள்ள ஏற்பாடுகளிற்கு (கடன்படல் கிரயம்) அமைவாவும் உள்ளது.<br><br>இலங்கை மின்சாரசபை பங்களிப்பு உள்ளபடியாக பேரேட்டு கணக்கில் இருக்கவில்லை, விசேட நோக்க செயற்திட்ட கணக்குகளின் நோக்கத்திற்காக தயாரிக்கப்பட்ட வேலையாக உள்ளது. | முறையான கணக்கீட்டு முறையை பிரயோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 2.8 மில்லியன் தொகையான விசேட வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கிலுள்ள வட்டி இ.க.நி 7 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் தனியாக சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தின் பகுதி 3 தொடர்பில் ரூபா 24.1 மில்லியன் பெறுமானத்தேய்வு காசுப்பாய்ச்சல் கூற்றில் காசல்லாத விடயத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 24.1 | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசல்லாத விடயத்தில் செயற்திட்டத்தின் பகுதி 3 தொடர்பில் பெறுமானத்தேய்வை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2020 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் பகுதி 2 மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விரிவான கணக்காய்வு மாத்திரம் 2020 இல் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் பகுதி 1 மற்றும் 2 மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் விரிவான கணக்காய்வு 2020 இல் இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் வினைதிறன் மற்றும் ஆக்கபூர்வத்தை உறுதிப்படுத்தவதற்கு உள்ளக கணக்காய்வாளரால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED/03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2020 யூன் 08 ஆந் திகதிய | செயற்திட்டமானது உரிய ஊழிர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியை கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து 2020 | இலங்கை மின்சார சபை 2020 ஒக்தோபர் மாதம் வரை ஊழியர்களின் APIT செலுத்தியிருந்ததுடன் சபை | தொடர்ச்சியாக சபைத் தீர்மானத்தை அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | SEC/2020/03(திருத்திய) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கை | ஒக்தோபர் 31 வரை ரூபா 47.7 மில்லியன் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE)/ முற்பணமளிக்கப்பட்ட வருமான வரி (APIT) என்பவற்றினை செலுத்தியிருந்தது. | தீர்மானத்தின் பிரகாரம், ஊழியர்கள் 2020 நவம்பரிலிருந்து ஊழியர்கள் APIT செலுத்துகின்றனர். | |
| (இ) | 2016 மார்ச் 23 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | ஏற்பாடுகளிற்கு முரணாக செயற்திட்ட உத்தியோகத்தர்களிற்கு 2020 திசெம்பர் 31 வரை ரூபா 83.1 மில்லியன் கூட்டுத் தொகையான விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் மிகையூதியம் என்பன செலுத்தப்பட்டிருந்தது.. | இது இலங்கை மின்சார சபையின் கொள்கை மற்றும் சகல இலங்கை மின்சார சபை ஊழியர்களிற்குமான வழிகாட்டல் என்பவற்றிக்கு அமைவாக உள்ளது. | சபையானது சுற்றறிக்கை வேண்டுகையை பின்பற்ற வெண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கூறு | நடவடிக்கைகள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | முகாமைத்துவத்தின் பதில் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|
| பகுதி 01- அபிவிருத்தி செய்யப்பட்ட நீர் மின்சார உருவாக்கல் மற்றும் உப நிலையத்திற்கு இணைத்தல் | (அ) மொறகொல்ல நீர் மின்சார பொறி நிர்மாணம். | | | மூல பூர்த்தியாக்கல் பட்டியல் திகதி 2029 யூன் மாதமாக இரந்தது. இது 2023 நவம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | • அணைக்கட்டு மீள் வடிவமைப்பிற்காக MASL வேண்டுகை மற்றும் அனுமதி பெறல் செயற்பாடுகளில் பிரச்சனை என்பன காரணமாக லொட் ஏ மற்றும் லெட பீ இன் கொள்வனவில் தாமதம் |
| | | 100 | 55 | பிரதான சிவில் வேலைகளிற்கான | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | i. லொட் A1<br>ii. லொட் A2<br>iii. லொட் B<br>iv. லொட் 3<br>v. லொட் C<br><br>(ஆ) 05 கிமீ, 132 கேவீ இணைந்த பரிமாற்ற உட்கட்டமைப்பின் நிர்மாணம் மற்றும் பொருத்துதல். | | 7.5<br>-<br>-<br>100 | ஒப்பந்தம் (லொட் ஏ2) மூல பூர்த்தியாக்கல் பட்டியல் திகதிக்கு பின்னரான போதும் 2019 ஒக்தோபர் 04 இல் வழங்கப்பட்டிருந்தது.<br><br>லொட் ஏ1 மற்றும் ஏ2 மீதான ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தம் (லொட் ஏ3) 2016 ஒக்தோபர் 24 இல் வழங்கப்பட்டிருந்த போதும் லொட் ஏ1 மற்றும் ஏ2 இற்கான ஒப்பந்தம் முறையே 2018 மே மாதம் மற்றும் 2019 ஒக்தோபர் மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது.<br><br>இந்த வேலைப் பகுதி செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்கு அப்பால் உள்ளது. | • பின்வருவன உள்ளடஙகலாக, கோவிட்-19 நோய் தொற்று காரணமாக ஒட்டுமொத்த தாமதம்.<br><br>• விசேடமாக வெடித்தல் வெடிபொருட்கள் இறக்குமதி தடைகள்,<br><br>• வெளிநாட்டவருக்கான வீசா வழங்குதல் மற்றும் வெளிநாடுகளிலிருந்தான பிரயாணத் தடை என்பன காரணமாக தாமதம். |
| பகுதி 02– உயர்த்தப்பட்ட பரிமாற்ற உட்கட்டமைப்பு இயலளவு | i. லொட் A<br>ii. லொட் B1<br>iii. லொட் B2 | 100<br>100<br>100 | 92.4<br>78<br>100 | சகல நடவடிக்கைகளினதும் மூல பூர்த்தியாக்கல் திகதி 2019 யூன் மாதமளவில் பட்டியலிடப்பட்ட போதிலும், செயற்பாட்டிலுள்ள நான்கு நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு 2021 ஆகஸ்ட் மாதமளவில் எதிர்பார்க்கப்பட்டது. | • ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்.<br><br>• பாதகமான காலநிலை, உப ஒப்பந்தகாரர்களின் பிரச்சகைள், நிரப்புல் பொருட்களின் போக்குவரத்து மீது விதிக்கப்பட்ட தடை.<br><br>• கோவிட்-19 நோய் தொற்று காரணமாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பகுதி 03: முன்னேற்றப்பட்ட நடுத்தர வோல்டேச் வலையமைப்பின் வினைத்திறன். | வவுணதீவு மற்றும் மாதம்பையை சுற்றி அண்ணளவாக 92 கிமீ, 33 கேவீ நடுத்தர வோல்டேச் வழி மற்றும் கன்ரீஸ் பொருத்துல் | 100 | 98.9 | 2020 பெப்ரவரி 25 ஆந் திகதிய 20.03.049 ஆம் இலக்க சபை குறிப்பு பிரகாரம், செயற்திட்டத்தின் இந்தப் பகுதி பல சட்ட வழக்குகள் காரணமாக தீர்மானிக்கப் பட்டிருந்ததுடன் சபையின் விநியோக பிரிவு 02 இற்கு மிகுதி வேலைகளை கையளிக்கப்பட்டது. | காணி பிரச்சனை நீக்குவதில் தாமதம். |
| பகுதி 04: முன்னேற்றப்பட்ட வினைத்திறனான எரிசக்திக்காக கேள்வி பக்க முகாமைத்துவம் | (அ) மீற்றரிடல் முன்னோடி செயற்திட்டம்.<br><br>(ஆ) சுரங்க களஞ்சியப்படுத்தல் முன்னோடி செயற்திட்டம்.<br><br>(இ) நிலையான கட்டிட முன்னோடி செயற்திட்டம். | 100<br><br>-<br><br>- | 100<br><br>-<br><br>- | சாதுரியமான மீற்றரிடல் முன்னோடி செயற்திட்டத்தின் அமுலாக்கல் பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 11 மாதங்கள் கடந்த பின்னர் 20219 யூலை 29 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. மேலும், சுரங்க களஞ்சியப்படுத்தல் முன்னோடி செயற்திட்டத்தின் கீழான நிர்மாண வேலைகள் கேள்வி வழி செயற்திட்ட முகாமைத்துவத்தால் கொள்கைகளை சுற்றியுள்ள இடத'தில் எடுக்கப்பட்ட வெளிச் சுற்றாடல் மாற்றங்கள் காரணமாக பின்னர் இரத்துசெய்யப்பட்டிருந்தது. | - |
| பகுதி 05 – வழங்கப்பட்ட இயலளவு அபிவிருத்தி ஆதரவு | (அ) மின்சக்தி துறை அபிவிருத்தி, மற்றும் வினைத்திறனான எரிசக்தி முன்னேற்ற முறைமை மற்றும் அனுப்புதல் என்பவற்றிற்கான நிறுவனரீதியான இயலளவக்கான ஆலோசனை சேவை | - | - | சொல்லப்பட்ட ஆலோசனை சேவை ஏற்பாடு தொடங்கப்பட்டிருக்கவில்லை. | - |

| | | | |
|---|---|---|---|
| ஏற்பாடு | 100 | 100 | |
| ஆ)இரண்டாவது கட்டத்திற்கான புதிய செயற்திட்டங்களின் செயற்திட்ட முகாமைத்தவத்திற்காக ஆலோசனை சேவை ஏற்படு | | | |

முகாமைத்துவத்தின் பதில்

தாமதங்களிற்கான ஒரே காரணங்கள்.

கணக்காய்வாளருடைய சிபார்சுகள்

பகுதி 01 - எதிர்பாரக்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.

பகுதி 02 - எதிர்பாரக்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதியளவில் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல்.

பகுதி 03 – செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் காணி சுவீகரிக்கப்பட வேண்டும்.

பகுதி 04 – செயற்திட்ட நடவடிக்கைகளை திட்டமிடப்பட்டவாறு நிறைவேற்றப்பட வேண்டும்.

பகுதி 05 - செயற்திட்டம் தொடங்குவதற்கு முன்னர் அவசியமான பகுதிகள் இனங்காண வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 05 பகுதிகளை கொண்டுள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் அத்தகைய பகுதி நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் | முதல் இரண்டு பகுதிகள் AGM செயற்திட்டப் பிரிவின் கீழ் வருகின்றதுடன் ஏனைய பகுதிகள் இலங்கை மின்சார சபையின் பல்வேறு பிரிவுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றது. AGM செயற்திட்ட பிரிவானது பிரதான உருவாக்கல் மற்றும் பரிமாற்றம் தொடர்புபட்ட செயற்திட்டங்கள் மாத்திரம் | திட்டமிட்டப்பட்டவாறு இருக்கின்ற செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்கும் நோக்கில் முறையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்பார்வைக்கு பொறுப்பாக இருந்த மேலதிக பொது முகாமையாளரிற்குப் பதிலாக இலங்கை மின்சார சபையின் பல்வேறு பிரிவு தலைவர்களின் கீழ் இருந்தது எனவே, செயற்திட்ட பகுதிகளின் ஒருங்கிணைப்பு திருப்திகரமான மட்டத்தில் இருக்கவில்லை. | கையாளுகின்றதுடன் செயற்திட்டத்தின் நோக்கெல்லைக்குள் ஏதாவது விநியோகப் பிரிவு உள்ளடக்கப்பட்டிருக்குமாயின் பின்னர் பின்னர் அந்த பகுதிகள் விநியோகப் பிரிவின் கீழ் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் மேவப்பட்டிருக்கும். | |
| (ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கி கடன்களின் (3146/3147) மூல முடிவுறுத்தல் திகதி 2020 மார்ச் 31 ஆக இருந்ததுடன் எதிர்பாரக்கப்பட்ட முன்னேற்றங்களை அடையாமையால் 2024 யூலை 13 இற்கு மேலும் நீடிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால், செயற்திட்ட நிர்வாகச் செலவினம் மற்றும் வேறு செலவினங்கள் அதிகரிப்பதுடன் கைதவிர்க்கப்படாத மீதிகளிற்காக அதிகமான கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருக்கும். மேலும், நீண்ட கால குறைந்த கிரய உருவாக்கல் திட்டத்தின் நோக்கு அமைய முடியாதிருக்கும். | இந்த செயற்திட்டத்தின் பகுதி 01 இன் நிர்மாணத்திற்கு காலத்திற்கு காலம் கால நீடிப்பு வழங்கப்பட்டமை பிரதானமாக உள்ளது. தாமதங்களிற்கான காரணம் மேற்குறிப்பிட்டவற்றிற்கு வெளியே இருந்தது. மூல பூர்த்தியாக்கல் திகதியை விட பின்தங்கி இருந்தமையால் காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தமையால் மேலதிக செலவினம் ஏற்பட்டிருக்கும் என்பது **தவிர்க்கமுடியாதுள்ளது**. | எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தியாக்கல் திகதிக்குள் இருக்கின்ற செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|
| செயற்திட்டத்தின் பகுதி 2 இன் லொட் B2 இன் அளவீட்டு பட்டியலின் பிரகாரம், 3 வாகனங்கள் இறக்குமதி செய்வதற்கு ஐ.அ.டொலர் 158,065 ஒமுக்கப்பட்டிருந்தது. இறக்குமதி செய்யப்பட்ட 3 வாகளங்களிற்குமான உள்ளபடியான மொத்த CIF ஐ.அ.டொலர் 58,446 ஆக இருந்த பொதிலும் ஒப்பந்தகாரருக்கு ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலர் 158,065 செலுத்தப்பட்டது. மேலும், ரூபா 12.4 மில்லியன் தொகையான | ஆரம்ப கெள்வி விலை SCAPC இன் அனுமதியுடன் கேள்வி கேரல் நேரத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இலங்கை மின்சார சபை 2016 மே மாதத்தில் கைச்சாத்திடப்பட்ட லொட் B2 ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், உடன்பட்ட ஒப்பந்த விலையை செலுத்தவதற்கு உடன்பட்டுள்ளதுடன் 2017 இல் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டள்ளது. ஒப்பந்தகாரரால் CIF மற்றும் தள்ளுபடி விலைப் பிரகாரம் வாகனங்கள் விலை வித்தியாசமாக இருந்தது, | எதிர்காலத்தில் உள்ளபடியான கிரயத்தில் தேவைப்பட்ட சொத்துக்களை கொள்வன செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மொத்த இறக்குமதி வரி ஒப்பந்தகாரருக்கு மீளளிக்கப்பட்டிருந்தது. இதன்படி, செயற்திட்டத்திற்கான வாகனங்கள் கொள்வனவு செய்யும் போது செயற்திட்டமானது சிக்கனமற்ற செலவினம் ஏற்பட்டிருந்தது.

இலங்கை மின்சார சபையானது லொட் B2 ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கேள்வி விலையை ஒப்பந்தகாரருக்கு செலுத்துவதற்கு தவறியிருந்தது.

வாகனங்களின் உள்ளபடியான விலை மற்றும் ஒப்பந்த அளவீட்டு பட்டியல் விலை செயற்திட்டத்தின் வேறு 2 டொட்களிற்காக (A, B1) ஒப்பிடப்பட்டுள்ளது. உள்ளபடியான இறக்குமதி விலை ஒப்பந்தத்தில் CIF விலையை விட அதிகமாக உள்ளது. ஆகவே, லொட் B2 ஒப்பந்த BOQ விலை அதிகரிப்பு லொட் A மற்றும் லொட் B1 கிரய சோமிப்புக்களால் குறைக்கப்பட்டுள்ளது. இது செயற்திட்டத்தின் சிக்கன கொடுக்கல் வாங்கல்களாக உள்ளது.

CEB/AGM/TR/2014/ICB/GPDEEIIP1-2/B2 ஒப்பந்த உடன்படிக்கையின் 14.10 ஆம் விசேட ஒப்பந்த நிபந்தனைப் பிரகாரம், ஒப்பந்தகாரரால் செலுத்தப்பட்ட வரிகள் மற்றும் சுங்கத்தீர்வைகளிற்காக விதிவிலக்கு வழங்கப்பட்டிருக்காமையால் மீளளிக்க வேண்டியிருந்தது. ஆகவே, ஒப்பந்த நிபந்தனைப் பிரகாரம் வாகனங்களிற்கான வரிகள் செலுத்தப்பட்டுள்ளன.

**3.4 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்**

| **பதவியணி நிலை** | **பதவிகளின் எண்ணிக்கை** | | | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளருடைய சிபார்சுகள்** |
|---|---|---|---|---|---|
| | **அனுமதிக் கப்பட்டவை** | **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | **வெற்றிடங் களின் எண்ணிக்கை** | | |
| **பகுதி 1 – மொறக்கொல்ல நீர் மின்சார பொறி** | | | | தேவையான உத்தியோகத்தரை வாடகைக்கமர்த்துவதற்கான நடவடிக்கை செயற்பாட்டில் உள்ளது. | தேவப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| செயற்திட்ட பணிப்பாளர் | 1 | 1 | - | | |
| செயற்திட்ட முகாமையாளர் – சிவில் வேலைகள் | 1 | 1 | - | | |
| செயற்திட்ட முகாமையாளர் – எந்திரவியல் வெலைகள் | 1 | 1 | - | | |
| செயற்திட்ட முகாமையாளர் – மின்சார வேலைகள் | 1 | 1 | - | | |
| கணக்காளர் | 1 | - | 1 | | |
| சிவில் பொறியியலாளர் – மீள்குடியேற்ற மற்றும் சுற்றாடல் கண்காணிப்பு | 1 | 1 | - | | |
| பொறியியலாளர் - செயற்திட்ட கண்காணிப்பு மற்றும் திட்டமிடல் | 1 | 1 | - | | |
| மின்சார பொறியியலாளரகள் | 5 | 2 | 3 | | |
| எந்திரவியல் பொறியியலாளரகள் | 4 | 0 | 4 | | |
| சிவில் பொறியியலாளரகள் | 5 | 3 | 2 | | |
| பொறியியல் உதவியாளர் | 1 | 1 | - | | |
| கணக்கீட்டு உதவியாளர் | 1 | - | 1 | | |
| சுற்றாடல் உத்தியோகத்தர் - சுற்றாடல் மாசு அளவீடுகள் மற்றும் சமூகப் பிரச்சனைகள் | 1 | - | 1 | | |
| காணி உத்தியொகத்தர் | 1 | - | 1 | | |
| தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் | 1 | - | 1 | | |

| | | | |
|---|---|---|---|
| மின்சார அட்தியட்சகர்கள் | 4 | 2 | 2 |
| எந்திரவியல் அட்தியட்சகர்கள் | 4 | 1 | 3 |
| சிவில் அட்தியட்சகர்கள் | 16 | 14 | 2 |
| அளவையாளர்கள் | 2 | - | 2 |
| பிரதம எழுதுனர் | 1 | - | 1 |
| செயலாளர் | 2 | - | 2 |
| எழுதுனர் | 7 | 5 | 2 |
| தரவு பதிவு செயற்பாட்டாளர் | 3 | - | 3 |
| சுற்றுலா விடுதி பாதுகாவலர் | 1 | - | 1 |
| களத்டெ தாழில்திறன் ஊழியர்கள் | 6 | 1 | 5 |
| களத் தொழில்திறனற்ற ஊழியர்கள் | 7 | 2 | 5 |
| சாரதிகள் | 24 | 17 | 7 |
| அலுவலக உதவியாளர்கள் | 3 | 1 | 2 |
| **மொத்தம்** | **106** | **55** | **51** |